பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

13 04 2026 MONDAY 6 30 PM

வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

2. அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக திமுக தெரிவித்துள்ளது.

3. தமிழகத்தில் அரசியல் மாற்றம் ஏற்பட வேண்டும் என்ற நோக்கில் செயல்பட்டு வருவதாக நாம் தமிழர் கட்சி கூறியுள்ளது.

4. கண்காணிப்பு நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் மேலும் தீவிரப்படுத்த வேண்டும் என்று தமிழக வெற்றிக் கழகம் வலியுறுத்தியுள்ளது.

5. அமெரிக்க ஓப்பன் Pickleball சாம்பியன் போட்டியில், இந்தியா இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.

>>>>>><<<<<

விவசாயிகளின் நலனுக்கு தேசிய ஜனநாயக கூட்டணி முன்னுரிமை அளித்துள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி, பிஜேபி வாக்குச்சாவடி முகவர்களிடம் காணொலி வாயிலாக இன்று அவர் உரையாற்றினார்.

மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணியில் திமுக அங்கம் வகித்த போது, தமிழகத்தின் வளர்ச்சிக்கான புதிய திட்டங்கள் கொண்டுவரப்படவில்லை என்று அவர் குற்றம் சாட்டினார்.

அந்த காலகட்டத்தில் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காணப்படவில்லை என்றும் அவர் குறை கூறினார்.

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு மத்தியில் பொறுப்பேற்ற பின்னர், தமிழகத்தின் சாலை, ரயில் மற்றும் விமான கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

11 புதிய மருத்துவக் கல்லூரிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மத்திய மாநில அரசுகள் ஒருங்கிணைந்து செயல்பட்டால், அதிவிரைவான வளர்ச்சியை எட்ட இயலும் என்றும் அவர் கூறினார்.

பிரதமரின் வீட்டுவசதி திட்டத்தின் பலன்கள், தமிழகத்தில் முழுமையாக சென்றடையவில்லை என்றும் இதற்கு திமுக அரசு தான் காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் மகளிருக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாகவும், இதற்கு திமுக அரசின் நிர்வாகத் தோல்வியே காரணம் என்றும் அவர் கூறினார்.

போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்தவும் திமுக அரசு தவறிவிட்டதாக திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டினார்.

>>>>>><<<<<<

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றியுள்ளதாக அக்கட்சியின் துணை பொதுச்செயலாளர் திருமதி. கனிமொழி கூறியுள்ளார்.

நெல்லை மாவட்டம், கங்கைகொண்டானில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

தமிழகத்திற்கு உரிய நிதியை மத்திய அரசு வழங்கவில்லை என்றும் அவர் குறை கூறினார்.

திமுக அரசு நிறைவேற்றிய திட்டங்கள் மூலம் அனைத்து தரப்பினரும் பயனடைந்துள்ளதாகவும் திருமதி. கனிமொழி தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் அஇஅதிமுக ஆட்சிப் பொறுப்பேற்றால், கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், மாணவர்கள் அனைவருக்கும் தரமான கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு, சிறந்த எதிர்காலம் உறுதி செய்யப்படும் என்று தெரிவித்தார்.

கல்வியை அரசியல் லாபத்திற்காக திமுக பயன்படுத்துவதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டினார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் அரசியல் மாற்றம் ஏற்பட வேண்டும் என்ற நோக்கில் நாம் தமிழர் கட்சி செயல்பட்டு வருவதாக அதன் தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் கூறியுள்ளார்.

இன்று திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

மக்களை மட்டுமே நம்பி கூட்டணியின்றி தமது கட்சி போட்டியிடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

காவிரியில் தண்ணீர் தர மறுக்கும் காங்கிரஸ் கட்சியுடன் திமுக கூட்டணி வைத்துள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

வாரிசு அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

ஊழலற்ற நிர்வாகத்தை நாம் தமிழர் கட்சி உறுதி செய்யும் என்றும் திரு. சீமான் கூறினார்.

>>>>>><<<<<<

சட்டப்பேரவை தேர்தலுக்கான கண்காணிப்பு நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் மேலும் தீவிரப்படுத்த வேண்டும் என்று த.வெ.க. தலைவர் திரு. விஜய் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பொள்ளாச்சி அருகே அனுமதியின்றி கட்சி ஸ்டிக்கரை ஒட்டியதற்கு எதிர்ப்பு

தெரிவித்த பெண்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த தாக்குதல் சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ள அவர், இதில் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இத்தகை அராஜக போக்கினை தடுத்து நிறுத்த, உரிய நடவடிக்கைகளை காவல்துறை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கும் சூழலை, தேர்தல் ஆணையம் ஏற்படுத்த வேண்டும் என்றும் திரு. விஜய் கோரியுள்ளார்.

>>>>>><<<<<<

இனி தேர்தல் களம்...

(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது நீலகிரி மாவட்டத்துக்கு உட்பட்ட தொகுதிகள்.

*(வாய்ஸ் பைட் - தொகுப்பு - 2 mins 18 sec.)*

>>>>>><<<<<<

தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர்.

லாரி மீது கார் மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - லெட்சுமணன் 43 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 5 தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட - துரை 34 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஆட்சியர் திரு. தினேஷ்குமார் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

வேலூர் மாவட்டத்தில் வாக்குச்சாவடி சீட்டு மற்றும் தேர்தல் தொடர்பான கையேட்டினை வாக்காளர்களுக்கு வழங்கும் பணியினை ஆட்சியர் திருமதி. சுப்புலெட்சுமி இன்று தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

தென்காசி மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில், சிலம்பம் விளையாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

அமெரிக்க ஓப்பன் Pickleball சாம்பியன் போட்டியில், இந்தியா இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.

ஃப்ளோரிடாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவுகளில் Arjun Singh-ம், Dhiren Patel-ம் இப்பதக்கங்களை கைப்பற்றினர்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 3 தங்கம், ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>>><<<<<<

இந்தியா - அர்ஜென்டினா இடையேயான முதலாவது மகளிர் ஹாக்கி போட்டி, இன்று Buenos Aires-ல் நடைபெறவுள்ளது.

>>>>>><<<<<<

Hamburg ஓப்பன் ஸ்குவாஷ் போட்டி, இன்று தொடங்கியது.

>>>>>><<<<<<

Havirov சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டி இன்று தொடங்கியது.

>>>>>><<<<<<